செய்தி வெளியீடு எண்: 157 நாள்: 11.03.2013

## செய்தி வெளியீடு

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள் தலைமையில் இன்று (11.3.2013) தமிழ்நாடு திரைப்படத் துறையினர் நலவாரியக் குழுவின் முதல் கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்தின் துவக்கமாக, தமிழ்நாடு திரைப்படத் துறையினர் நல வாரியம் அமைத்து உத்தரவிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நல வாரிய உறுப்பினர்களால் நன்றி தெரிவிக்கப்பட்டது. இக்கூட்டத்தின் போது தமிழ்நாடு திரைப்படத் துறையினர் நலவாரியக் குழுவிற்கு புதிதாக நியமிக்கப்பட்ட தலைவர் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்கள் பொறுப்பேற்றுக் கொண்டனர். இக்கூட்டத்தில் நல வாரிய உறுப்பினர்களுக்கு பயன்பெறும் விதத்தில் உள்ள நலத் திட்டங்களான விபத்து ஈட்டுறுதித் திட்டம், இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை, ஈமச்சடங்கு உதவித் தொகை, கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித் தொகை, கருச்சிதைவு/கருக்கலைப்பு, மூக்குக் கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் மற்றும் முதியோர் ஓய்வூதியம் ஆகிய திட்டங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

மேலும், திரைப்படத் துறையினலர் நல வாரிய உறுப்பினர்களின் பதிவுகளை புதுப்பித்தல், புதிய உறுப்பினர்கள் சேர்த்தல் மற்றும் உறுப்பினர்களுக்கு உறுப்பினர் அட்டை அச்சடித்து வழங்குதல் குறித்து விவாதிக்கப்பட்டன.

இக்கூட்டத்தில் திரு கே. பாலச்சந்தர், தயாரிப்பாளர், இயக்குநர், திரு ஆர்.வி. உதயகுமார், தயாரிப்பாளர், இயக்குநர் திரு பி. வாசு, இயக்குநர், திரு லியாகத் அலிகான், வசனகர்த்தா, திரு இப்ராகிம் ராவுத்தர், தயாரிப்பாளர், திரு மோகன் காந்திராமன், தயாரிப்பாளர், இயக்குநர், திரு ராமராஜன், நடிகர், தயாரிப்பாளர், இயக்குநர், திருமதி டி.கே. கலா, நடிகை மற்றும் பாடகி, மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் மூ. இராசாராம், இ.ஆ.ப., வருவாய்த் துறை செயலாளர் திரு.ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., தொழிலாளர் நலத்துறை செயலாளர் திரு.மோகன் பியாரே, இ.ஆ.ப. செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப. மற்றும் இதர துறை சார்ந்த உறுப்பினர்கள் கலந்துகொண்டார்கள்.

வெளியீடு:– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை